(29) தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்

க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை : **2020 மற்றும் 2021** ஆம் வருடங்களுக்கு மாத்திரம் உரித்துடையது.

வினாத்தாள் கட்டமைப்பு

வினாத்தாள் I :- **நேரம் 02 மணித்தியாலங்கள்**

இவ்வினாத்தாள் **A, B, C** என்ற **மூன்று (03)** பகுதிகளைக் கொண்டது.

பகுதி A (புதிய மற்றும் பழைய பாடத் திட்டங்களுக்கானது) - இந்தப் பகுதி 5 தெரிவுகளைக் கொண்ட **25** பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. அவை **2008 (பழைய)** மற்றும் **2018 (புதிய)** பாடத்திட்டங்களுக்குப் **பொதுவான** பாடப் பகுதிகளிலிருந்து தயாரிக்கப்படும். **எல்லா** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவிற்கு **01** புள்ளி வீதம் **25** புள்ளிகள் வழங்கப்படும்.

- **B, C** ஆகிய பகுதிகளுள் **ஒரு பகுதியை மாத்திரம்** தெரிவு செய்து **எல்லா** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

பகுதி B (பழைய பாடத் திட்டத்திற்கானது) - இந்தப் பகுதி **2008 (பழைய) பாடத்திட்டத்திற்கு** ஏற்ப தயாரிக்கப்பட்ட 5 தெரிவுகளைக் கொண்ட **25** பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. ஒரு வினாவிற்கு **01** புள்ளி வீதம் **25** புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி C (புதிய பாடத் திட்டத்திற்கானது) - இந்தப் பகுதி **2018 (புதிய) பாடத்திட்டத்திற்கு** ஏற்ப தயாரிக்கப்பட்ட 5 தெரிவுகளைக் கொண்ட **25** பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. ஒரு வினாவிற்கு **01** புள்ளி வீதம் **25** புள்ளிகள் வழங்கப்படும்.

வினாத்தாள் I இற்கான மொத்தப் புள்ளிகள்

பகுதி A	-	1×25 =	25 புள்ளிகள்
பகுதி B/ C	-	1×25 =	25 புள்ளிகள்
மொத்தப் புள்ளிகள்			50 புள்ளிகள்

வினாத்தாள் II :- **நேரம் 03 மணித்தியாலயங்கள்** (மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்)

இவ்வினாத்தாள் **A , B** என்ற **இரண்டு (02)** பகுதிகளைக் கொண்டது.

- பகுதி **A** இலிருந்து **இரண்டு (02)** வினாக்களையும் பகுதி **B** இலிருந்து ஏதேனும் **மூன்று (03)** வினாக்களையும் தெரிவு செய்து **ஐந்து (05)** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுத வேண்டும்.

பகுதி A - இந்தப் பகுதி **மூன்று (03)** கட்டமைப்பு கட்டுரை வகை வினாக்களைக் கொண்டது. அவை **2008 (பழைய)** மற்றும் **2018 (புதிய)** பாடத்திட்டங்கள் இரண்டுக்கும் **பொதுவான** பாடப் பகுதிகளிலிருந்து தயாரிக்கப்படும்.

பகுதி B - இந்தப் பகுதி **எட்டு (08)** கட்டமைப்பு கட்டுரை வகை வினாக்களைக் கொண்டது. அதில் **4, 5, 6, 7** ஆகிய வினாக்கள் **2008 (பழைய)** பாடத்திட்டத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படும். **8, 9, 10, 11** ஆகிய வினாக்கள் **2018 (புதிய)** பாடத்திட்டத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படும்.

வினாத்தாள் II இற்கான மொத்தப் புள்ளிகள் = $05 \times 40 = 200$

இறுதிப் புள்ளியைக் கணித்தல் :-

வினாத்தாள் I		=	50
வினாத்தாள் II	= $200 \div 4$	=	50
இறுதிப் புள்ளி		=	100

www.ikedu.lk

வினாப்பத்திரம் I

பகுதி A

01. தொடர்பாடுநர் மற்றும் பெறுநருக்கு இடையிலான வகிபாகம் பரிமாற்றம் பெறுவதைக் காட்டும் மாதிரி எது?
(1) ஹரோல்ட் டீ லாஸ்வெல் மாதிரி.
(2) ஒஸ்குட் - வ்ஷ்ராம் மாதிரி.
(3) அரிஸ்டோட்டில் மாதிரி.
(4) சார்ள்ஸ் - ஒஸ்குட் மாதிரி.
(5) ஷனன் - வீவர் மாதிரி.

02. குறியீடுகளைப் பயன்படுத்தி அவற்றைத் தகவலாக பரிமாற்றும் செயன்முறை எவ்வாறு இனங்காணப்படும்?
(1) பின்னூட்டம்.
(2) குறிமுறையவிழ்ப்பு.
(3) குறிமுறையாக்கம்.
(4) மாற்றம்
(5) குறியாக்கம்.

03. வாய்மொழியற்ற தொடர்பாடலை கலைத்துவமாகவும் பிரபல்யமாகவும் பயன்படுத்தக்கூடிய ஊடகமாக அமைவது,
(1) சினிமா ஆகும்.
(2) தொலைக்காட்சி ஆகும்.
(3) வானொலி ஆகும்.
(4) இணையம் ஆகும்.
(5) புதிய ஊடகம் ஆகும்.

04. தகவல் மூலத்தை தெளிவாக இனங்காண முடியாத தொடர்பாடல் வடிவமாவது,
(1) வாய்மொழித் தொடர்பாடலாகும்.
(2) முறைசார் தொடர்பாடலாகும்.
(3) முறைசாராத் தொடர்பாடலாகும்.
(4) வாய்மொழியற்ற தொடர்பாடலாகும்.
(5) பேச்சுத் தொடர்பாடலாகும்.

05. கணித ஆசிரியர் கரும்பலகையில் எழுதிய இலக்கங்கள் சில தெளிவற்றுக் காணப்பட்டதால் கமல் தனது பயிற்சிப் புத்தகத்தில் எழுதிய இலக்கங்களும் தவறாகின. அதனால் விடையும் பிழையாகியது. இது தொடர்பாடலில் அர்த்தப்படுத்தப்படுவது,
(1) பெறுநரது குறைபாடு என.
(2) தடை என.
(3) தவறான சிந்தனை என.
(4) கற்பனைத் தவறு என.
(5) விளக்கமின்மை என.

06. கடற்கரையோரக் கிராமமொன்றின் மக்களுக்குச் சுனாமி அனர்த்தச் சந்தர்ப்பத்தில் அவ் அச்சுறுத்தல் பற்றிய அறிவிப்பு மிகவும் துரிதமாகவும் பரவலாகவும் வழங்கப்படக் கூடியது,
(1) எழுத்துமூலத் தொடர்பாடல் மூலமாகும்.
(2) கட்புலத் தொடர்பாடல் மூலமாகும்.
(3) செவிப்புலத் தொடர்பாடல் மூலமாகும்.
(4) செவிப்புல - கட்புலத் தொடர்பாடல் மூலமாகும்.
(5) எழுத்துமூல - கட்புலத் தொடர்பாடல் மூலமாகும்.

07. வெகுசனத் தொடர்பாடல், ஏனைய தொடர்பாடல் வகைகளிலிருந்து வேறுபடுவதற்குக் காரணமாக அமைவது அதன் செயற்பாட்டின் வெளிப்படையான,
(1) தொழில்சார் தன்மையாகும்.
(2) ஒத்ததன்மையினரான பெறுநர்களாகும்.
(3) தொடர்பாடுநர்-பெறுநர் அண்மித்த தன்மையாகும்.
(4) உடனடி பின்னூட்டமாகும்.
(5) முடிவற்ற தன்மையாகும்.

08. பாடசாலை மைதானத்தில் மயக்கமடைந்த மாணவரொருவருக்கு முதலுதவி வழங்கிய மாணவர் தலைவர், தான் வாசித்திருந்த புத்தகங்கள் மற்றும் முதலுதவி வழங்கும் முறை பற்றித் தான் அவதானித்த விடயங்கள் ஆகியன இதன்போது தனக்கு உதவின என்று கூறினார். இவ் விடயங்கள் அடங்கிய தொடர்பாடல் மூலக்கூறாவது,
(1) குறிமுறையாக்கம்.
(2) குறிமுறையவிழ்ப்பு.
(3) பின்னூட்டம்.
(4) அனுபவக் களம்.
(5) தகவல் பெறுகை.

09. "பொதுசனத் தொடர்பு" என்றால் என்ன? எனும் தலைப்பில் இடம்பெறும் விரிவுரையில் உள்ளடங்கப்பெற **குறைந்தளவிலான** சாத்தியப்பாடு கொண்ட கூற்றாக அமைவது,
(1) புகழ் பற்றி அவதானத்தைச் செலுத்துவது.
(2) கருத்துருவாக்கத்துடன் தொடர்புடையது.
(3) திட்டமிடலுடன் ஆற்றும் காரியமாவது.
(4) நல்லெண்ணத்தைப் பாதுகாப்பதற்குக் காரணமாவது.
(5) நிச்சயிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் இடம்பெறுவது.

10. தொலைபேசித் தொடர்பாடல் ஒன்றின்போது இருதரப்பினராலும் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் பயன்படுத்தக் கூடிய வாய்மொழியற்ற தொடர்பாடல் முறைகள் அடங்கிய தெரிவு எது?
(1) பேச்சின் வேகம், நிசப்தம், நாற்றம், ரிதம்.
(2) நிசப்தம், சாடைக்குறிப்பு, ரிதம், வெளி.
(3) நிசப்தம், பேச்சின் வேகம், ரிதம், குரல் மாதிரிகள்.
(4) பேச்சின் வேகம், தொனி, நாற்றம், ரிதம்.
(5) வெளி, தோற்றப்பாங்கு, குரல், ரிதம்.

11. சுற்றாடலில் உள்ள பல்வேறு உயிருள்ள, உயிரற்ற ஒலிகளை ஒன்றிலிருந்து ஒன்று வேறுபிரித்து இனங்காண இயலுமாயிருப்பது,
(1) சூழலை அறிந்துகொள்ள உதவும்.
(2) செவிப்புலத் தொடர்பாடல் திறன் விருத்திக்குக் காரணமாகும்.
(3) விலங்குகளின் சத்தத்தைப் போலச்செய்வதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கும்.
(4) செவிப்புலச் செயற்பாட்டை இனங்காண உதவுவதாகும்.
(5) முறைசாராத் தொடர்பாடலை ஊக்குவிக்கக் காரணமாவதாகும்.

12. பாரம்பரியத் தொடர்பாடல் விதிமுறையாக நாட்டார் நாடகங்களைப் பற்றிக் குறிப்பிடும் **தவறான** கூற்று எது?
(1) கண்ணுக்குப் புலப்படாத பொருட்கள் அழைக்கப்படும் மற்றும் அவற்றின் மூலம் உதவிகள் பெற்றுக்கொள்ளப்படும்.
(2) ஏதேனும் கதை ஒன்று நாட்டார் நாடகங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்படும்.
(3) பிரதேசங்களுக்கு ஏற்ப நாட்டார் நாடகங்களில் பல்வகைமை காணப்படும்.
(4) பாடல் பாடுதல், உரையாடல் என்பன பயன்படுத்தப்படும்.
(5) நடிப்புக்குத் தேவையான பொருட்கள் சூழலிலிருந்தே பெற்றுக்கொள்ளப்படும்.

13. ஊடக வரையறையை நேரடியாக மேற்கொள்ள முடிவது,
(1) வெகுசன ஊடக ஒழுக்கநெறிகள் மூலமாகும்.
(2) பாரம்பரிய முறைகள் மூலமாகும்.
(3) சுதந்திரமான கருத்தியலின் மூலமாகும்.
(4) அன்றாட விதிமுறைகள் மூலமாகும்.
(5) ஊடக ஒருங்கிணைவின் மூலமாகும்.

14. நவீன வெகுசன ஊடகங்களில் **குறைந்தளவில்** காணக்கூடிய பண்பாகக் கருத்திற்கொள்ளக்கூடியது,
(1) நாட்டாரியலைப் பாவனைக்கு எடுத்தலாகும்.
(2) நிறுவனமயப்படுத்தப்பட்டுக் காணப்படுதலாகும்.
(3) அதிக தூண்டல் காணப்படுதலாகும்.
(4) ஊக்கிகளைப் பயன்படுத்தலாகும்.
(5) மனிதர்களது அன்பை இனங்காண்தலாகும்.

15. பண்பாடு என்பது,
A- மனித அனுபவங்கள், பழக்கங்கள் மற்றும் ஆற்றல்களின் இணைவு ஆகும்.
B- வெகுசன ஊடகங்கள் மூலமாகக் கற்பிக்கப்படும் மதிப்பீடுகளின் இணைவு ஆகும்.
C- சமூகத்தை ஒன்றாக இணைக்கும் பெறுதிகளைக் கொண்டதாகும்.
D- மனிதத் தொடர்புகளினால் உருவாகி விருத்தி பெற்றதாகும்.

மேற்கூறிய கூற்றுகளில் சரியானவை,

(1) A, B, C ஆகியன மட்டும்.
(2) A, B, D ஆகியன மட்டும்.
(3) A, C, D ஆகியன மட்டும்.
(4) B, A, D ஆகியன மட்டும்.
(5) B, C, D ஆகியன மட்டும்.

16. படைப்பாக்கம் ஒன்றிற்கான கருப்பொருளைப் பெற்றுக்கொள்வதற்கான மூன்று அடிப்படை முறைகளாவன,
(1) அறிவாற்றல், மீளுணர்தல் மற்றும் புலனுணர்வு என்பனவாகும்.
(2) தமது, பிறரது மற்றும் ஊடகத்தின் மூலம் கிடைக்கும் அனுபவங்கள் என்பனவாகும்.
(3) சுய பேச்சு, கற்பனை மற்றும் வழித்தோன்றல்கள் என்பனவாகும்.
(4) உணர்தல், புலனுணர்வு மற்றும் இலக்கிய விமர்சனம் என்பனவாகும்.
(5) சுய அனுபவம், கற்பனை அனுபவம் மற்றும் சமூகமயமாதல் என்பனவாகும்.

17. பிரசித்தமான பண்பாட்டில், வெகுசன ஊடகங்கள் பெரும்பாலும் பிரதானப்படுத்துவது
(1) வணிக ஆதாயங்களை முன்நிறுத்துவது ஊடாக, பொதுவான பார்வையாளர்களைக் கவரும் செய்திகளை ஆகும்.
(2) பெரும்பான்மையோரின் பண்பாட்டினைப் பிரதிநிதித்துவம் செய்யும் செய்திகளை ஆகும்.
(3) பெறுநரின் அறிவை முன்னேற்றும் செய்திகளை ஆகும்.
(4) பெறுநர்களின் கேள்விகளுக்கு (demand) இசைவான உள்ளடக்கத்துடனான செய்திகளை ஆகும்.
(5) சமூகத்தில் பிரசித்தி பெற்ற பண்பாட்டின் கூறுகளை அடிப்படையாகக் கொண்ட செய்திகளை ஆகும்.

18. பழமொழிகள் பற்றிய மிகப் பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்க.
(1) கருத்துக்களைச் சுருக்கமாகவும் பலமாகவும் வெளிப்படுத்தப் பயன்படுத்தக் கூடியது.
(2) அன்றாடத் தொடர்பாடல் நடவடிக்கைகளில் பயன்படுத்துவது கடினமானது.
(3) குறியீடு மற்றும் பார்வைக்குப் புலப்படாத தாக்கங்களுடன் தொடர்புபட்டு உருவானது.
(4) நாட்டார் கதைகளுடன் தொடர்பு காணப்படாது.
(5) புதிய உலக நிகழ்வுகளுக்கு ஏற்ப புதிதாக உருவாகாது.

19. ஊடக மொழிப் பாவனை பற்றிய **தவறான** கூற்றைத் தெரிவு செய்க.
(1) ஊடகத்தில் பயன்படுத்தப்படும் மொழியின் மூலமாகப் பெறுநரது உளவியல் நிலைமைகளை விருத்தி செய்யலாம்.
(2) சில வேளைகளில் ஊடகத்தில் பயன்படுத்தப்படும் மொழியின் மூலமாகப் பெறுநர்கள் இலக்கினைத் தொலைத்து விடுவார்கள்.
(3) கட்புல ஊடகங்கள் எதிர்பார்த்த தாக்கத்தை ஏற்படுத்த மொழியை அதிகமாகப் பயன்படுத்தும்.
(4) புதிய ஊடகங்களில் பயன்படுத்தப்படும் மொழி அச்சு ஊடக மொழி போல் தரநிலையுடன் காணப்படாது.
(5) வானொலி ஊடகத்தில் விபரணரீதியான பந்திகளைத் தவிர்ப்பது உசிதமானது.

20. எமது நாட்டில் அண்மையில் ஏற்பட்ட சர்வதேச பரவல் நோய் நிலைமையின்போது மக்களுக்கு மானியங்கள் வழங்குவதற்காக வெகுசன ஊடகங்கள் மூலமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நிறுவனத்தின் நோக்குநிலையிலிருந்து பார்க்கும்போது இது,
(1) வெகுசன ஊடகத்தின் முதனிலைப் பணியாகும்.
(2) இடர் முகாமைத்துவச் செயற்பாடாகும்.
(3) சமூகப் பராமரிப்பாகும்.
(4) பொதுசனத் தொடர்பு வடிவமாகும்.
(5) ஊடகத்தின் சமூகப் பொறுப்பை நிறைவேற்றுவதாகும்.

www.ikedu.lk

21. ஊடக விளங்கறிவு தொடர்பாக முன்வைக்கப்பட்ட கூற்றுகள் சில கீழ்க் காணப்படுகின்றன.

A - ஊடக விளங்கறிவின் அடிப்படை எழுதுவதற்கும் மற்றும் வாசிப்பதற்குமான ஆற்றலாகும்.

B - ஊடக விளங்கறிவு அதிகம் பொருத்தமாக இருப்பது அச்சு ஊடகங்களிலாகும்.

C - ஊடக உள்ளடக்கத்தை விளங்கிக் கொண்டு பெறுகை செய்வது ஊடக விளங்கறிவாகும்.

D - தகவல் உருவாக்குதல் மற்றும் மதிப்பிடுதல் ஊடக விளங்கறிவின் அங்கமாகும்.

மேற்காணும் கூற்றுகளில்,

(1) A மட்டும் உண்மையானது.
(2) B மட்டும் உண்மையானது.
(3) C மட்டும் உண்மையானது.
(4) A, B ஆகியன மட்டும் உண்மையானவை.
(5) C, D ஆகியன மட்டும் உண்மையானவை.

22. நாட்டாரியற் கற்கையானது சகல படைப்பாளிகளுக்கும் முக்கியமானது எனத் திறன்வாய்வாளர்கள் குறிப்பிட்டுச் சொல்கின்றனர். ஏனெனில்,

(1) நாட்டாரியலின் வழியே மக்களின் மெய்யறிவை இனங்காண முடியும்.
(2) நாட்டரியல் ஓர் அடிப்படை மூலாதாரமாகும்.
(3) நாட்டாரியல் படைப்பாக்கத் தன்மையானது.
(4) நாட்டாரியலில் கதைக் கருக்களை கண்டறிய முடியும்.
(5) நாட்டாரியல் நாட்டார் மொழியை கொண்டிருக்கிறது.

23. ஊடகத் தொழில் தொடர்பான **தவறான** கூற்று எது?

(1) மிகவும் நிறுவனமயப்படுத்தப்பட்ட கட்டமைப்பிற்குள் செயற்படும்.
(2) சந்தைத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படும்.
(3) பல பகுதியினரையும் இணைத்து தகவல் உருவாக்கும்.
(4) ஊடக நிறுவனங்களுக்கிடையில் போட்டித்தன்மை காணப்படும்.
(5) அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சமூக மனதை வியாபார ஆதிக்கத்திலிருந்து மீட்டெடுக்கும்.

24. திரைப்படமொன்றின் தொடர்காட்சிகளில் முதலாவது காட்சியாக நபரொருவர் இறக்கும் காட்சி காண்பிக்கப்பட்டது. இரண்டாவதாக, ஆற்றுப்படுக்கை ஒன்றின் மீதாகத் தொடர்ச்சியாகப் பறக்கும் பறவைகளின் காட்சியொன்று இணைக்கப்பட்டிருந்தது. அந்தக் காட்சிகளைப் பார்த்த பாலன் அந்தக் காட்சிச் செயற்பாடு பற்றித் தன்னால் எதனையும் புரிந்துகொள்ள முடியாதிருந்ததாகத் தெரிவித்தார். பாலன் முன்வைத்த இந்தக் கருத்திற்குக் காரணமாக அமையக்கூடியது,

(1) பாலனால் திரைப்படக் குறியீடுகளின் அர்த்தத்தைச் சரியாகக் புரிந்துகொள்ள இயலாதிருந்தமை.
(2) பாலனிடம் திரைப்பட ஊடகப் பண்பாடு பற்றிய சரியான விளக்கம் இல்லாதிருந்தமை.
(3) பாலன் அமர்ந்திருந்த இடத்திலிருந்து திரைப்படத்தைச் சரியாகப் பார்வையிட இயலாதிருந்தமை.
(4) பாலன் எழுத்தறிவைக் கொண்டிராதிருந்தமை.
(5) திரைப்படத்தின் காணொளிகள் பாலனுக்குத் தெளிவற்றதாக இருந்தமை.

25. ஊடகம், பூகோளமயமாதல் ஆகியன பற்றிப் பாடசாலை ஊடகக் கழகத்தினால் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் உயர்தர மாணவர்கள் சிலர் முன்வைத்த கூற்றுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

மதுஷி :- பூகோளமயமாதலின் பரவலுக்கு ஊடகம் துணைபுரிந்தது.
ரேணுகா :- வர்த்தகக் கைத்தொழிலின் சமகாலத் தேவையாக ஊடகப் பண்பாட்டை அறிமுகம் செய்யலாம்.
மேனகா :- வெகுசன ஊடகப் பண்பாட்டில் மூழ்கிப்போயுள்ள மக்களுக்கு அதன் தாக்கம் பற்றிய விழிப்புணர்வு இல்லை.
பிரபோதினி:- ஊடகம் அதன் சந்தை விரிவாக்கத்திற்குப் பாரம்பரியச் சிந்தனைகளைப் பயன்படுத்துவதில்லை.

மேற்குறித்த கூற்றுகளுள்,

(1) மதுஷி, ரேணுகா, மேனகா ஆகியோரின் கூற்றுகள் மாத்திரம் சரியானவை.
(2) ரேணுகா, மேனகா, பிரபோதினி ஆகியோரின் கூற்றுகள் மாத்திரம் சரியானவை.
(3) மதுஷி, மேனகா, பிரபோதினி ஆகியோரின் கூற்றுகள் மாத்திரம் சரியானவை.
(4) மதுஷி, ரேணுகா, பிரபோதினி ஆகியோரின் கூற்றுகள் மாத்திரம் சரியானவை.
(5) மதுஷி, ரேணுகா, மேனகா, பிரபோதினி ஆகிய அனைவரின் கூற்றுகளும் சரியானவை.

www.ikedu.lk

பகுதி B

26. நாவலாசிரியர் ஒருவரால் வழங்கப்பட்ட கதாப்பாத்திரங்களுக்கிடையிலான பின்னணியில் ஓர் உணர்வுரீதியான விவரிப்பு,
(1) அறிக்கையிடல் எனப்படும்.
(2) ஆற்றுகை எனப்படும்.
(3) வர்ணனை எனப்படும்.
(4) பேச்சு எனப்படும்.
(5) திறனாய்வு எனப்படும்.

27. கீழ்க்காணும் சோடி எண்ணக்கருக்களில் ஓர் **எதிரிடையை** அவதானிக்கக்கூடியதாக அமைவது,
(1) அதிகார ஆதிக்கம் மற்றும் கம்யூனிச எண்ணக்கருக்களுக்கிடையே ஆகும்.
(2) தாராண்மைவாத மற்றும் மேற்கத்தேய எண்ணக்கருக்களுக்கிடையே ஆகும்.
(3) அதிகார ஆதிக்கம் மற்றும் தாராண்மைவாத எண்ணக்கருக்களுக்கிடையே ஆகும்.
(4) கம்யூனிச மற்றும் புரட்சிவாத எண்ணக்கருக்களுக்கிடையே ஆகும்.
(5) ஜனநாயக மற்றும் அபிவிருத்தி எண்ணக்கருக்களுக்கிடையே ஆகும்.

28. மாற்று ஊடகம் தொடர்பிலான மிகப் பொருத்தமான கூற்று, மாற்று ஊடகமானது,
(1) பிரசித்த பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கும்.
(2) பிரதான துறைகளில் வெகுசன ஊடகங்களுடன் போட்டியிடுகின்றது.
(3) சமூகத்தின் பெருந்தொகுதியொன்றைச் சென்றடைவதாக உள்ளது.
(4) கருத்தியல் சார் நிலைப்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்குகின்றது.
(5) உயர் ஊடகத் தொழிநுட்பத்தைப் பயன்படுத்துகின்றது.

29. மொழிப் பாவனையுடன் தொடர்புடைய சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன :
A - சுய வெளிப்பாட்டை முன்வைக்கும் ஆற்றல்
B - தனியாட்களை மையப்படுத்திய செயற்பாடு
C - தனிப்பட்ட நோக்குநிலை அவசியமாயிருத்தல்
மேற்படி விடயங்களுக்கேற்றவாறு மொழிப் பாவனை வகைகளை ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் தெரிவு யாது?
(1) பேச்சு, விவரணம், பிரதி எழுத்து
(2) ஆற்றுகை, பிரதி எழுத்து, விவரணம்
(3) உரை, ஆற்றுகை, பேச்சு
(4) பேச்சு, ஆற்றுகை, விவரணம்
(5) பிரதி எழுத்து, பேச்சு, உரை

30. தற்போதைய ஊடகப் பண்பாட்டில் விருத்தியடைந்திருக்கும் ஊடகக் குவிவுப் (media convergence) போக்கிற்குக் காரணமாவது,
(1) ஊடக அலைவரிசைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பு
(2) தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதில் பெறுநர்கள் கொண்டிருக்கும் ஆற்றலின் அதிகரிப்பு
(3) இணையத்தின் பரவலாக்கம்
(4) தொடர்பாடலின் காட்சிவழிப் போக்கின் அதிகரிப்பு
(5) பூகோளமயமாக்கத்தின் அதிகமான தாக்கம்

31. தற்போது நடைமுறையில் இருக்கும், தகவல்களைப் பெறுவதற்கான உரிமைச் சட்டம் பயன்படுத்தக்கூடியதாக இருப்பது,
(1) ஊடகவியலாளர்கள் மாத்திரம் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகும்.
(2) அரச மற்றும் தனியார் துறைகளிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகும்.
(3) அரசினதும் அது தொடர்புடைய நிறுவனங்களினதும் செயற்பாடுகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காகும்.
(4) 10 வருடங்களுக்கு முன்னராக பரிமாற்றப்பட்ட அரசு தொடர்புடைய ஆவணங்களைப் பரிசீலிப்பதற்காகும்.
(5) அரச துறையிலிருந்து எந்தத் தகவலையும் உடனடியாகப் பெற்றுக்கொள்வதற்காகும்.

www.ikedu.lk

32. அபிவிருத்தித் தொடர்பாடல் வழிமுறைகள் பற்றித் தீர்மானிக்கையில் கவனத்திற் கொள்வதற்காகப் பிரேரிக்கப்பட்டுள்ள சில கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - அவை புதிய தொழிநுட்ப அபிவிருத்தியுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படக் கூடியன.

B - உரிய விடயம் தொடர்பில் நிபுணத்துவம் கொண்டோரினால் திட்டங்கள் தயாரிக்கப்படுவது அவசியமானது.

C - அவற்றை பாரம்பரிய தொடர்பாடல் வழிமுறைகளுடன் இணைத்து பிரயோகிப்பது தொடர்பிலான ஆற்றல்களைக் கண்டறிவது சிறப்பானது.

D - அவை இலக்கு வைக்கப்பட்ட சமூகத்திற்கு மாத்திரமான, திட்டமிடப்பட்ட தொடர்பாடல் வழிமுறைகளாக அமைவது அவசியமானது.

E - பலன்தரக்கூடியவாறு மொழியைப் பயன்படுத்தும் ஆற்றலை ஆய்ந்தறிந்து தெரிவு செய்வது கட்டாயமானது.


இவற்றுள் உண்மையான கூற்றுகள்

(1) A, B, C, D ஆகியன மாத்திரம் (2) A, B, D, E ஆகியன மாத்திரம்
(3) A, C, D, E ஆகியன மாத்திரம் (4) B, C, D, E ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D, E ஆகிய யாவும்.

33. மேதினப் பேரணிகளைப் பற்றி மேற்கொள்ளப்பட்ட அரச ஊடக மற்றும் தனியார் ஊடக அறிக்கையிடல்கள் தொடர்பில் வேறுபாடுகள் பலவற்றைக் காணமுடிகின்றது. இதனைப் புரிந்துகொள்வதற்கு மிக முக்கியமாவது,
(1) ஊடக உரிமையாண்மையை பற்றிய பகுப்பாய்வுடனான புரிந்துணர்வு
(2) ஊடக அறிக்கையிடல் மீதான இற்றைப்படுத்தப்பட்ட அறிவு
(3) ஊடக அரசியல்கள் தொடர்பான ஒரு யதார்த்தமான பார்வை
(4) ஊடக விளங்கறிவு மீதான செய்முறைத் திறன்கள்
(5) ஊடக சுயாதீனம் மீதான கோட்பாட்டு அறிவு

34. **தவறான** கூற்றைத் தெரிவு செய்க.
(1) தேர்தல் பரப்புரைகளில், பொதுமக்களின் நிகழ்ச்சிநிரல் வெகுசன ஊடகங்களால் தயாரிக்கப்படுகின்றது.
(2) ஆழ்பரிவு பற்றி நன்றாகப் புரிந்துகொள்வதாயின், அனுதாபத்துடன் அது ஒப்பிடப்பட வேண்டும்.
(3) வாய்மொழித் தொடர்பாடல், வாய்மொழியல்லாத தொடர்பாடல் அம்சங்களையும் கொண்டிருக்கின்றது.
(4) வெகுசன ஊடகங்கள் ஊடாக சமூக யதார்த்தம் சரியாக விவரித்துக் காட்டப்படுகின்றது.
(5) மொழியில், ஒலிக்கும் அர்த்தத்திற்கும் இடையே தரக்கரீதியான தொடர்பு இருப்பதில்லை.

- கீழே காட்டப்படுவது ஹரோல்ட் டீ லாஸ்வெல்லின் தொடர்பாடல் மாதிரி எனக் கருதுக. இம்மாதிரியின் துணையுடன் **35** தொடக்கம் **38** வரையிலான வினாக்களுக்கு விடையளிக்குக.



35. லாஸ்வெல்லின் தொடர்பாடல் மாதிரியில் உள்ளடங்கும் பிரதான மூலக்கூறுகளிலிருந்து ஒரு மூலக்கூறு நீக்கப்படுமாக இருந்தால், அது பெர்லோவின் தொடர்பாடல் மாதிரியிலுள்ளவற்றை ஒத்ததாக அமையும். அவ்வாறு ஒத்திருப்பதற்கு மேற்குறித்த மாதிரியிலுள்ள மூலக்கூறுகளில் நீக்கப்பட வேண்டியது,
(1) A (2) B (3) C (4) D (5) E

36. பெர்லோவின் தொடர்பாடல் மாதிரியில் உள்ளடங்கியுள்ள ஒவ்வொரு மூலாதாரத்துடனும் இணைந்ததாக ஐந்து பிரதான பண்புகள் வீதம் அறிமுகப்படுத்தப்படுகின்றது. மேலே வினா 35 இன் விடையாகக் குறிப்பிட்ட மூலக்கூறு நீக்கப்பட்டதன் பின்னர், மிகுதியாகவுள்ள நான்கு மூலக்கூறுகளும் பெர்லோவின் மாதிரியுடன் ஒத்திருக்குமாயின், அந்த நான்கின் ஒரே விதமான பண்புகளைக் காணத்தக்க மூலக்கூறுகள் இரண்டுமாவன
(1) A, B ஆகியன (2) A, D ஆகியன (3) B, C ஆகியன
(4) B , D ஆகியன (5) C , E ஆகியன

37. மேற்படி மாதிரியில் பின்னூட்டம் உள்ளீர்க்கப்படுமாயின், செய்தியானது பயணிப்பது,
(1) A இலிருந்து D இற்காகும். (2) A இலிருந்து E இற்காகும்.
(3) B இலிருந்து A இற்காகும் (4) D இலிருந்து A இற்காகும்.
(5) E இலிருந்து A இற்காகும்.

38. மேற்படி மாதிரி வெகுசனத் தொடர்பாடல் சந்தர்ப்பமொன்றில் பிரயோகிக்கப்படுமானால், செய்திப் பத்திரிகைக்குரிய விடயமாக அமைவது,
(1) A (2) B (3) C (4) D (5) E

39. கீழே தரப்படுவன, படைபாக்கப் பணி தொடர்பான சில விடயங்களாகும்.
A - தனிப்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுதல்
B - கல்வியறிவு தொடர்பான அறிவைக் கொண்டிருத்தல்
C - தகவலின் மேலெழுந்தவாரியான அர்த்தம்
D - வேறுப்பட்ட நுட்பங்கள் தொடர்பான அறிவு
இவற்றில்,"படைப்பாக்க வாசிப்பு" என்பது இணைந்திருப்பது,
(1) A மற்றும் B யுடன் மாத்திரம் (2) B மற்றும் C யுடன் மாத்திரம்
(3) C மற்றும் D யுடன் மாத்திரம் (4) A, B மற்றும் C யுடன் மாத்திரம்
(5) A, B மற்றும் D யுடன் மாத்திரம்

40. ஜனதா வங்கியில் நிதியை முதலீடு செய்திருந்த வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தகவல்களை ஒரு செய்தி இணையத்தளம் வெளியிட்டிருந்தது. இது, வங்கியின் நற்பெயரைக் களங்கப்படுத்துவதாக அமைந்திருந்ததால், சம்பவத்தை விளக்குவதற்காக ஊடகச் சந்திப்பு ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் வங்கி அதிகாரிகள் அதிக கவனம்செலுத்த வேண்டியது,
(1) பங்கேற்கும் ஊடகவியலாளர்களுக்கு சிறப்பான உபசரிப்பைத் தயார் செய்தலிலாகும்.
(2) ஊடகவியலாளர்களுக்குப் பெறுமதிவாய்ந்த அன்பளிப்பொன்றை நினைவுப் பரிசாக வழங்குவதிலாகும்.
(3) ஊடகவியலாளர்களுக்கு வங்கியின் முன்னைய ஆண்டறிக்கைப் பிரதிகளை வழங்குவதிலாகும்.
(4) வங்கியினால் மேற்கொள்ளப்படும் சமூக சேவைகள் பற்றி விவரித்தலாகும்.
(5) கேட்கப்படலாம் என எதிர்ப்பார்க்கப்படும் கேள்விகளுக்கான பதில்களைத் தயார்ப்படுத்திக் கொள்வதிலாகும்.

41. பின்வருவன சுய எண்ணக்கரு தொடர்பான கலந்துரையாடலொன்றில் மாணவர்கள் முன்வைத்த சில கூற்றுகள் ஆகும்.
ருவான் :- சுய எண்ணக்கரு என்பது ஒருவர் மற்றையவர்களுக்கு எவ்வாறு தன்னை எடுத்துக்காட்டுகிறார் என்பதாகும்.
ராம் :- இது அளவீட்டுக்கு உட்படுத்தப்பட முடியாதது.
ரஹீம் :- இது பிறப்பிலிருந்து வருவது.
ரொஜர் :- இது கால ஓட்டத்துடன் மாற்றமுறலாம்.
இவற்றுள் சுய எண்ணக்கரு பற்றிய சரியான கூற்றுகளை முன்வைத்தவர்கள்,
(1) ரஹீம் மற்றும் ராம்
(2) ருவான் மற்றும் ரஹீம்
(3) ருவான் மற்றும் ரொஜர்
(4) ராம் மற்றும் ரொஜர்
(5) ருவான், ராம், ரஹீம், ரொஜர் ஆகியன அனைவருமாவர்.

42. உலகத்திலுள்ள வேறுப்பட்ட நாடுகளில் காணப்படும் ஊடக உரிமையாண்மை தொடர்பிலான வகுப்பறைக் கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட சில கருத்துகள் கீழே தரப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலும் காணக்கிடைக்கும் நிலை யாது?
(1) கட்டுப்பாடு அரசின் மேலாதிக்கமாகக் காணப்படும்.
(2) ஊடகத்தை தனியார் உரிமை கொண்டிருந்தாலும், அது அரசினால் கட்டுப்படுத்தப்படுகின்றது.
(3) ஊடகத்தை தனியார் உரிமை கொண்டிருந்தாலும், அது அரசின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.
(4) ஊடக உரிமையாண்மையும் கட்டுப்பாடும் அரசின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.
(5) ஊடக உரிமையாண்மையும் கட்டுப்பாடும் அரசினதும் தனியாரினதும் பங்கேற்புடன் இடம்பெறுகின்றன.

www.ikeu.lk

43. ஒரு பாடசாலையில் ஆரம்ப வகுப்புகளுக்கான புதிய கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கான திட்டம் ஒன்றை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆரம்பித்தது. அதன் செயலடைவை செயற்றிட்ட முகாமைத்துவ ஒழுங்கமைப்பின் ஆவணமொன்றினூடாகக் கண்காணிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. செயற்திட்ட முகாமைத்துவ ஒழுங்கமைப்பு ஆவணத்தில் அவசியம் உள்ளடக்கப்பட வேண்டிய சில முக்கிய விடயங்களாவன,
(1) இலக்குகள், வரவு- செலவுத் திட்டம், நிறுவனக் கட்டமைப்பு, வரையறைகள் முதலியன.
(2) தொடர்புடைய செயற்பாடுகள், காலச் சட்டகம், நியதிகள், பொறுப்புகள் முதலியன.
(3) நிதி வளங்கள், பௌதிக வளங்கள், மனித வளங்கள், மதிப்பீட்டுச் செயன்முறைகள் முதலியன.
(4) வரவு- செலவுத்திட்டம், உத்திகள், பணி வரையறுக்கப்பட்ட பகுதிகள், எதிர்ப்பார்க்கும் பெறுபேறுகள் முதலியன.
(5) இலக்குகள், உத்திகள், வளங்கள், காலச் சட்டகம் முதலியன.

44. குறித்தவொரு நாட்டில், சட்டத்தையும் சமாதானத்தையும் நிலைநிறுத்தும் முகமாக சமூக ஊடகங்கள் தணிக்கை செய்யப்படுவது, அந்த ஊடகங்களில் செய்தியானது,
(1) பெறுநர்கள் மத்தியில் மிக வேகமாகப் பரவுவதன் காரணத்திலாகும்.
(2) உயரிய நம்பிக்கையைப் பெற்றிருப்பதாலாகும்.
(3) பகுப்பாய்வுடனான தகவல்கள் முன்வைக்கப்படுவதன் காரணத்திலாகும்.
(4) படங்கள் மற்றும் ஒலி ஆகிய சேர்க்கைகள் குறைவாகப் பயன்படுத்துவதன் காரணத்திலாகும்.
(5) தகவல்கள் அதிகாரம்மிக்க மூலங்களின் அடிப்டையில் மாத்திரம் முன்வைக்கப்படுவதன் காரணத்திலாகும்.

45. 'பெறுநரை மையப்படுத்திய செய்தி' என்பதால் கருதப்படுவது யாதெனில்,
(1) பெறுநருக்குச் செய்திகளை முன்வைப்பதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குதல்.
(2) பெறுநருக்கு ஏற்றவகையிலான செய்திகளை உருவாக்குதல்.
(3) பெறுநருக்குச் செய்திகள் முன்வைக்கப்பட்டதன் பின்னர் அவை பற்றி விசாரித்தல்.
(4) செய்தி வழங்குதலில் தொடர்பாடுபவரின் அடையாளத்தைக் கவனத்திற் கொள்ளாமை.
(5) பெறுநரின் சமூக, பண்பாட்டுப் பின்னணிகள் பற்றி கவனஞ் செலுத்தாமல் செய்திகளைத் தயாரித்தல்.

46. கீழ்க்காணும் கூற்றுகளைக் கருத்திற் கொள்க.
A - அபிவிருத்தியின் அடிப்படை வெகுசன ஊடகங்கள் என்பதால் அவை திட்டமிட்டவகையில் பயன்படுத்தப்படவேண்டும்.
B - சமூகத்தில் ஒவ்வொரு வரலாற்று மாற்றமும் வர்க்கப் போராட்டத்திற்கு உட்பட்டதாகும்.
C - கைத்தொழில் அபிவிருத்தியுடன் தொழிலாளர் வர்க்கம் உருவானது.
D - புதிய வியாபார வர்க்கம் விவசாயி மற்றும் தொழிலாளர்களை ஒடுக்குகின்றது.
மேற்காணும் கூற்றுகளில் சமூக வர்ணனை பற்றிய மாக்சிச அணுகுமுறைக்கு அமைய சரியானவையாக அமைவன,
(1) A, B ஆகியன மாத்திரம்
(2) B, C ஆகியன மாத்திரம்
(3) C, D ஆகியன மாத்திரம்
(4) A, B, C ஆகியன மாத்திரம்
(5) B, C, D ஆகியன மாத்திரம்

47. தனது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நீண்டகாலமாக அவற்றை முன்வைத்து அவை தோல்வியடைந்த பின்னர் நபரொருவர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகப் பகிரங்கமாகப் பொதுக் கட்டடமொன்றின் கூரையில் ஏறிச் சாகும்வரை உண்ணாவிரத முயற்சியில் ஈடுபடுவது தொலைக்காட்சி ஊடகவியலாளர் ஒருவருக்கு அறியக் கிடைத்தது. சமூகத்துடன் நட்புறவான செய்திகளைச் சேகரித்தலை தமது பொறுப்பாகக் கொண்ட ஓர் ஊடகவியலாளராக அவர் இங்கு செய்திருக்க வேண்டியது யாது?
(1) குறித்த நபர் பற்றிப் பொலிசாருக்கு அறிவித்து சம்பவத்திற்கு முன்னர் அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்தல்.
(2) சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபடும் முயற்சியைத் தடுப்பதுடன் அவரது கோரிக்கைகளை ஊடகம் வழியாக வெளிப்படுத்தச் செய்தல்.
(3) சம்பவங்களுக்கு உயர் முன்னுரிமையை வழங்கி அதனை உடனடிச் செய்தியாக ஊடகத்திற்கு அனுப்ப நினைத்தல்.
(4) தந்திரோபாயமாக ஏனைய ஊடக நிறுவனங்களின் செய்தியாளர்களைத் தடுப்பதுடன் அறிக்கையிடலின் தலைமையாளராகத் தான் உருவாவதற்கு நடவடிக்கையெடுத்தல்.
(5) அதிகாரிகள் இழைத்த தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்காக சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட முயற்சித்த நபரின் கருத்துக்களைக் காணொளிக் காட்சியாக உருவாக்க முயற்சித்தல்.

48. தொலைக்காட்சி விளம்பரங்கள் மீதான கலந்துரையாடலொன்று பாடசாலை ஊடக வட்டத்தில் இடம்பெற்றது.

ஜெயந்தி :- நுகர்வோர் எவ்வாறு பொருட்களை நுகர்கின்றனர் என்பதை விளம்பரங்கள் மாற்றத்திற்குள்ளாக்க முடியும்.

நயனி :- விளம்பரங்கள் இல்லாது வெகுசன ஊடகங்கள் உயிர்வாழ முடியாது.

ருவனி :- நம்பிக்கைத் தன்மையுடன் பொருட்களைக் கொள்வனவு செய்ய விளம்பரங்கள் உதவுகின்றன.

காமினி :- விளம்பரங்களை சரியாகப் புரிந்துகொள்வதற்கு, ஒருவர் ஊடக விளங்கறிவைக் கொண்டிருக்க வேண்டும்.

மேலே தரப்பட்ட கூற்றுகளிலிருந்து விளம்பரங்கள் பற்றிய சரியாக கூற்றுகளைத் தந்தவர்கள்,

(1) ஜெயந்தி மற்றும் ருவனி மாத்திரம்
(2) ஜெயந்தி, நயனி மற்றும் ருவனி மாத்திரம்
(3) நயனி, ருவனி மற்றும் காமினி மாத்திரம்
(4) ஜெயந்தி, நயனி மற்றும் காமினி மாத்திரம்
(5) ஜெயந்தி, நயனி, ருவனி, காமினி யாவரும்

49. விமல் தனது பணியிலிருந்து ஓய்வுபெற்றதால் தனது நாளாந்த வாழ்வுப் போக்கிலிருந்து விலகிச் செல்ல நேர்ந்தது. அத்தோடு, வாழ்வில் எதிர்பார்த்திராத மாற்றங்கள் வேறு அவரை மனதளவில் பலவீனமடையச் செய்தன. இது

(1) பதகளிப்பின் குறியீடு.
(2) மன அழுத்தத்தின் குறியீடு.
(3) மனக்கவலையின் குறியீடு.
(4) மனச்சோர்வின் குறியீடு.
(5) துருவமயமாதலின் குறியீடு

50. ஊடக விமர்சகரது வகிபாகங்கள் யாவை என்பது தொடர்பில் வகுப்பறையொன்றினுள் கலந்துரையாடல் ஒன்று உருவானது.

நிமல் :- விமர்சகருக்கு ஊடகத்தின் தொழில்சார்தன்மை தொடர்பில் விளக்கம் காணப்பட வேண்டும்.

கமல் :- சாதாரண பெறுநரைவிட விமர்சன ஆற்றல் உயர்ந்த நிலையில் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

விமல் :- அதேபோலவே, விமர்சகர் ஊடகப் படைப்பாக்கங்களை இடைவிடாமல் விமர்சனம் செய்யும் ஒருவராவார்.

ரமல் :- ஊடக உள்ளடக்கம் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டுமே தவிர ஊடகத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு அவர் பங்களிப்பு செய்யக் கூடாது.

மேற்காணும் கருத்துக்களில் விமர்சகரது வகிபாகத்துடன் தொடர்புடைய கருத்துக்களை முன்வைத்தவர்கள்,

(1) நிமல் மற்றும் கமல் ஆவர்.
(2) நிமல் மற்றும் விமல் ஆவர்.
(3) நிமல், விமல் மற்றும் ரமல் ஆவர்.
(4) கமல், விமல் மற்றும் ரமல் ஆவர்.
(5) நிமல், கமல் மற்றும் ரமல் ஆவர்.

www.ikedu.lk

பகுதி C

26. வெகுசன ஊடக நிறுவனங்கள் ஒரு சில விடயங்கள் தொடர்பில் அதிக அதிகாரத்தைப் பயன்படுத்தும். இது HUB மாதிரியில் குறிப்பிடப்படுவது,
(1) வடிகட்டி மூலமாக.
(2) தாக்கம் மூலமாக.
(3) ஊடக விஸ்தீரணம் மூலமாக.
(4) பின்னூட்டம் மூலமாக.
(5) வாயிற்காப்பாளர் மூலமாக.

27. நிறுவனமொன்றில் ஊடக அதிகாரியின் பணிகளுடன் **குறைந்தளவிலான** தொடர்பைக் காட்டுவது,
(1) நிறுவனம் பற்றிய விமர்சனங்களுக்குப் பதில் அளித்தல்.
(2) மதிப்பீட்டு அறிக்கை தயாரித்தல்.
(3) மேம்பாட்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடுசெய்தல்.
(4) நிதி முகாமைத்துவத்திற்கு அறிவுரை வழங்குதல்.
(5) புகழ் நாமம் பற்றி அவதானித்தல்.

28. 1934 இல் அமெரிக்காவில் நிறுவப்பட்ட கூட்டாட்சி தொடர்பாடல் ஆணைக்குழுவின் **(FCC)** முதன்மையான நோக்கமாவது,
(1) வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களைப் பிரசித்தப்படுத்துதலாகும்.
(2) வானொலி மற்றும் தொலைக்காட்சியின் வணிக நோக்கங்களைச் செயலூக்கப்படுத்துதலாகும்.
(3) வெகுசன ஊடக நிறுவனங்களுக்கு இடையேயான தொழினுட்பச் சிக்கல்களை ஒழுங்குமுறைப்படுத்துதலாகும்.
(4) அபிவிருத்தி நோக்கங்களுக்காக மக்களைச் செயலூக்கப்படுத்துதலாகும்.
(5) வெகுசன ஊடக நிறுவனங்களுக்கிடையிலான போட்டியை இழிவளவாக்குதலாகும்.

29. பேராசிரியர் பிலிப் கொட்லரினால் முன்வைக்கப்பட்ட நிகழ்வு வகைப்படுத்தலுக்குள் **அடங்காத** விடயமாக அமைவது,
(1) சமூக மற்றும் வாழ்வியல் நிகழ்வுகள்.
(2) அரசியல் நிகழ்வுகள்.
(3) கல்வி மற்றும் தொழில்சார் நிகழ்வுகள்.
(4) சர்வதேச நிகழ்வுகள்.
(5) ஆன்மிக நிகழ்வுகள்.

30. ஒரே வகுப்பில் கல்வி கற்ற நண்பர்கள் குழாத்தினர் பரீட்சையில் சித்தியெய்தியதன் பின்னர் புலமைப் பரிசில் பெற்று வெளிநாடு சென்றுவிட்டனர். அவர்கள் நவீன தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்தித் தகவல் பரிமாற்றிக்கொண்டனர். அத் தகவல் பரிமாற்றம் நிகழ்ந்தது,
A - கருவித் துணையுடன் கூடிய மற்றும் குழுத் தொடர்பாடலினாலாகும்.
B - மெய்நிகர் மற்றும் தொழினுட்பத் தொடர்பாடலினாலாகும்.
C - கருவித் துணையுடன் கூடிய மற்றும் மெய்நிகர் தொடர்பாடலினாலாகும்.
D - கருவித் துணையுடன் கூடிய மற்றும் தொழினுட்பத் தொடர்பாடலினாலாகும்.

மேற்காணும் கூற்றுகளில் உண்மையானவை
(1) A, B ஆகியன ஆகும்.
(2) A, C ஆகியன ஆகும்.
(3) B , C ஆகியன ஆகும்.
(4) C, D ஆகியன ஆகும்.
(5) A, B, C, D ஆகியன ஆகும்.

31. 1982 இல் யுனெஸ்கோ அமைப்பு குரூன்வெல்ட் பிரகடனம் மூலம் ஊடகக் கற்கைகள் பற்றி வரையறுத்தது,
(1) ஊடக விளங்கறிவு, விமர்சனரீதியாக ஊடக நுகர்வு மற்றும் படைப்பாக்கரீதியான சிந்தனையை சிறுவர்களிடத்தே உருவாக்குதல் என.
(2) வெகுசன ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி மனிதர்களிடத்தே புரிதலை ஏற்படுத்துதல் என.
(3) தொடர்பாடல் தொழினுட்பத்தின் வளர்ச்சி சமூகத்தில் செலுத்தும் தாக்கத்தின் இயல்பை விளக்குதல் என.
(4) உடைந்த உளவியல் நிலைமைகளைக் குறிவைத்து ஊடகம் மூலமாக எளிய மகிழ்வூட்டலை வழங்குதல் என.
(5) அபிவிருத்திசார் மற்றும் ஜனநாயக சிந்தனையுடன் கூடிய பிரஜையை உருவாக்குதல் என.

www.ikeou.lk

32. சுய தணிக்கைக் கொள்கைகளைக் கொண்ட தணிக்கை நிறுவனம் எது?
(1) பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச் சபை.
(2) இலங்கைப் பத்திரிகைப் பேரவை.
(3) இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு.
(4) இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு.
(5) இலங்கை கணினி அவசர சேவைகள் இணைப்பு நிலையம்.

33. 1978 ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பு யாப்பில் 14 (1) உறுப்புரை மூலமாக எல்லாப் பிரஜையினதும்,
A - தகவலை மதிப்பிடும் உரிமை உறுதிப்படுத்தப்படுகிறது.
B - பேச்சு மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படுகிறது.
C - தகவல் பெற்றுக்கொள்ளும் உரிமை வெளிப்படுத்தப்படுகிறது.
D - வெளியீட்டு உரிமை உறுதிப்படுத்தப்படுகிறது.
E - ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்படுகிறது.

மேற்காணும் கூற்றுகளில் உண்மையாவது,
(1) A மட்டும். (2) B மட்டும். (3) C மட்டும்.
(4) A, B, C ஆகியன மட்டும். (5) C, D, E ஆகியன மட்டும்.

34. நந்தாவுக்கு பியல் ஆங்கிலம் கற்பிக்கும் காட்சிகள் கம்பெரலிய திரைப்படத்தில் முக்கியமான காட்சிகளாகும். பின்னணியில் அமர்ந்திருந்து பின்னல் பின்னும் மாத்தறை ஹாமினேயும், முன்புறத்தில் மேசை மீது வெள்ளை அட்டை ஒன்றின் மேல் வைக்கப்பட்டிருக்கும் சங்கும் பிரபல கருத்துக்களை உணர்த்தும்.



இக் காட்சி பற்றிய விமர்சனங்கள் சில கீழ்க்காணப்படுகின்றன.
A - இக்காட்சி புராதனக் கிராமத்தின் செழிப்பைச் சித்திரிக்கின்றது.
B - தாயின் உள்ளம் பற்றிய தேசியப் பார்வை இயக்குநரது காட்சிகளுக்குள் சிக்கியுள்ளது.
C - சுப பலன்கள் பற்றிய நாட்டார் நம்பிக்கையை இயக்குநர் காட்சிச் சட்டகத்திற்குள் அடக்கியுள்ளார்.
D - காட்சியின் ஒழுங்கமைப்பு நடிகர்களின் உணர்வு வெளிப்பாட்டை மெருகூட்டுகிறது.

இவ் விமர்சனங்களுள் உண்மையாவது,
(1) A மட்டும். (2) A, B ஆகியன மட்டும்.
(3) A, B, C ஆகியன மட்டும். (4) B, C, D ஆகியன மட்டும்.
(5) A, B, C, D ஆகியன மட்டும்.

35. பஸ் வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த ரவிக்கு தனது அருகில் அமர்ந்திருந்த நபர் கேட்கும் கேள்விகளுக்கு பதில்கூறிக்கொண்டிருப்பது தொந்தரவாக இருந்தது. தனது கைத்தொலைபேசிக்குக் காதுகேள் பொறியை (Earphone) இணைத்த ரவி வானொலியில் ஒலிபரப்பாகிய பாடலொன்றை செவிமடுக்கத் தொடங்கினான். இது வெகுசனத் தொடர்பாடலில் எப் பயனாகக் கருதப்படுகிறது?

(1) அறிவாற்றல் (Cognition)
(2) சமூகமயமாதல் (Socialization)
(3) சமூக பயன்பாடு (Social Utility)
(4) மீளப்பெறுதல் (Withdrawal)
(5) திசை திருப்புதல் (Diversion)

36. ஊடக விளங்கறிவைக் கட்டியெழுப்புதல் தொடர்பான மூன்று கோட்பாடுகள் அடங்கும் சரியான விடையாது?
(1) தனிப்பட்ட அவதானம், இறையாண்மை, அறிவுப் பார்வை.
(2) தனிப்பட்ட அவதானம், அறிவுக் கட்டமைப்பு, திறன்கள்.
(3) சுயம், இறையாண்மை, தனிப்பட்ட அவதானம்.
(4) தனிப்பட்ட அவதானம், அறிவுப் பார்வை, திறன்கள்.
(5) அறிவுப் பார்வை, தனிப்பட்ட அவதானம், இறையாண்மை

- கீழே தரப்பட்டுள்ள அட்டவணையின் துணையுடன் 37 மற்றும் 38 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.

சமூக ஊடக பாவனை பற்றி மாணவர் குழுவொன்றால் நிகழ்த்தப்பட்ட ஆய்வின் தரவுத் தொகுதியொன்று கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்படுகிறது.

	கல்வி நடவடிக்கைகளுக்காக மட்டும் முகநூல் பயன்படுத்தல்	மகிழ்வூட்டலுக்காக மட்டும் முகநூல் பயன்படுத்தல்	கல்வி மற்றும் மகிழ்வூட்டல் ஆகிய இரு காரணிகளுக்காகவும் முகநூல் பயன்படுத்தல்
ஆண்	10	30	10
பெண்	20	30	20
மொத்தம்	30	60	30

37. மேற்படி தரவுத் தொகுதிக்கு ஏற்ப, மாணவர் குழுவினது முகநூல் பாவனையுடன் தொடர்புடைய ஆகாரம் (Mode), இடையம் (Median) மற்றும் இடை (Mean) என்பன முறையே காட்டப்படும் விடையைத் தெரிவு செய்க.
(1) 60, 30, 40 (2) 60, 40, 30 (3) 40, 60, 30
(4) 30, 60, 40 (5) 30, 20, 15

38. மாணவர் குழு கல்வி, மகிழ்வூட்டல் மற்றும் இவ்விரு காரணிகளுக்காகவும் சமூக ஊடகத்தைப் பயன்படுத்தும் சதவீதம் முறையே,
(1) 30%, 40%, 30% (2) 30%, 60%, 30% (3) 25%, 50%, 25%
(4) 22%, 66%, 22% (5) 20%, 30%, 20%

39. வானொலி, குரலை மையமாகக் கொண்ட ஊடகமாகும். இதில் மனிதக் குரலோடு சேரும் ஏனைய காரணிகளாக அமைவன,
(1) இசை, விலங்குகளின் ஒலி, ஒலிப் பிரயோகங்கள் மற்றும் நிசப்தம்.
(2) இசை, நிசப்தம், விலங்குகளின் ஒலி மற்றும் இயற்கையான ஒலி.
(3) இயற்கையான ஒலி, விலங்குகளின் ஒலி, ஒலிப் பிரயோகங்கள் மற்றும் நிசப்தம்.
(4) உருவக ஒலி, இசை, நிசப்தம் மற்றும் ஒலிப் பிரயோகங்கள்.
(5) இயற்கையான ஒலி, ஒலிப் பிரயோகங்கள், இசை மற்றும் நிசப்தம்.

40. தொடர்பாடல் செயற்பாட்டில் "ஒழுங்குமுறை" பற்றிய பொருத்தமான செயற்பாட்டைத் தெரிவு செய்க.
(1) செய்திப் பத்திரிகை அச்சுக் கடதாசிக்கு வரி அறவிடுதல்.
(2) செய்திப் பத்திரிகை பதிவு செய்யப்படுவதை கட்டாயமாக்குதல்.
(3) தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு இடையிலான போட்டியை இல்லாதொழித்தல்.
(4) செய்தி இணையத்தள அனுமதிப்பத்திரத்தை இற்றைப்படுத்துதல்.
(5) ஊடக நிறுவனங்களுக்கு இலாபம் ஈட்டும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல்.

www.ikeou.lk

41. கீழ்க்காணும் A,B,C மற்றும் D ஆகிய சோடி எண்ணக்கருக்களை உள்வாங்குக.

A - (i) உலக கொள்கைகள்
(ii) அரச கொள்கைகள்

B - (i) நவீனமயப்படுத்தல்
(ii) சார்புநிலை

C - (i) ஜனநாயக பங்குபற்றல்
(ii) மக்கள் மய நடவடிக்கைகள்

D - (i) பேண்தகுநிலை
(ii) சூழலியல் சமனிலை

அபிவிருத்திக்கான தொடர்பாடலை அர்த்தப்படுத்தும் மிகப் பொருத்தமான சோடி எண்ணக்கருக்களாக அமைவன

(1) A, B (2) A, C (3) A, D (4) B, C (5) C, D

42. தொலைக்காட்சியில் நாடகம் ஒன்று ஒளிபரப்பாகி முடிவடைந்ததன் பின்னர் ஒரு வியாபாரியினால் அது திருட்டுத்தனமாக ஒளிப்பதிவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டது அம்பலமாகியது. இது ஒரு தண்டனைக்குரிய குற்றமாகத் தெளிவாகக் குறிப்பிடப்படுவது,

(1) தகவலறியும் உரிமைச் சட்டத்தில் ஆகும்.
(2) புலமைச் சொத்துச் சட்டத்தில் ஆகும்.
(3) மனித உரிமைகள் சட்டத்தில் ஆகும்.
(4) தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனச் சட்டத்தில் ஆகும்.
(5) திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தில் ஆகும்.

43. "கடுமையான சூழலியல் நிலைமைகளைக் கொண்ட உலர் வலயத்தில் குடியமர்த்தப்பட்ட மகாவலி காணி உரிமையாளர்களினால் அக் காணிகளை மேம்படுத்த முடியும்" எனும் கருத்தை பிரஜைகள் வானொலி வழியாக மக்கள் மயப்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது,

(1) சிறந்த சூழலைக் கட்டியெழுப்புதலாகும்.
(2) அறுவடையை அதிகரிக்க வழிகாட்டுதலாகும்.
(3) மகாவலி நீர் ஒரு வளம் என்பதை உணர்த்துதலாகும்.
(4) சுய நம்பிக்கையைக் கட்டியெழுப்புதலாகும்.
(5) பங்குபற்றல் ஜனநாயகத்தை பிரசித்தப்படுத்துதலாகும்.

44. நிகழ்நிலை தரவு தொகுதியொன்றுக்கூடாக வெவ்வேறு தகவல் மூலங்களுக்குள் பிரவேசிக்க முடியுமாயிருப்பதைக் குறிப்பிடும் சொல்,

(1) எண்ணிமப்படுத்தல் (Digitalization)
(2) வலையமைப்பாதல் (Networking)
(3) இடைத்தொடர்பு (Interactivity)
(4) மீயுரை (Hypertexuality)
(5) தானியங்கி (Automation)

45. தமது பாடசாலை பற்றிய விவரணப் படமொன்றை ஒளிப்பதிவு செய்யும்போது ஒளிப் படங்களை ஒழுங்கமைக்கும் விதம் பற்றிய மாணவர்களது உரையாடலின்போது கீழ்க்காணும் விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

A - முழு பாடசாலையும் தென்படும் வண்ணம் பாடசாலையின் முற்பக்கத் தோற்றம் ஒளிப்பதிவு செய்யப்படவேண்டும்.
B - வகுப்பறையில் பாடம் கற்பிக்கும் ஆசிரியரது உருவம் வகுப்பறையின் பின்னணியுடன் காட்டப்படவேண்டும்.
C - அதிபரது முன்வைப்பின்போது அவரது முகத்தின் உணர்வுகள் தெளிவாகக் காட்டப்படவேண்டும்.
D - திரைப்படத்தின் இறுதிக் காட்சியாக பாடசாலையின் சின்னம் காட்டப்படவேண்டும்.

மேற்காணுபவற்றை ஒளிப்பதிவு செய்யும்போது மிகவும் பொருத்தமான பட ஒழுங்கு முறையாக அமைவது,

(1) நீள் எடுப்பு, இடைநிலை எடுப்பு, நெடுந்தொலை எடுப்பு, அண்மைநிலை எடுப்பு.
(2) நீள் எடுப்பு, அண்மைநிலை எடுப்பு, இடைநிலை எடுப்பு, நெடுந்தொலை எடுப்பு.
(3) நெடுந்தொலை எடுப்பு, இடைநிலை எடுப்பு, நீள் எடுப்பு, அண்மைநிலை எடுப்பு.
(4) மிக நெடுந்தொலை எடுப்பு, நீள் எடுப்பு, மிகு அண்மைநிலை எடுப்பு, அண்மைநிலை எடுப்பு.
(5) நெடுந்தொலை எடுப்பு, நீள் எடுப்பு, அண்மைநிலை எடுப்பு, மிகு அண்மைநிலை எடுப்பு.

www.ikedu.lk

46. பூகோளப் பண்பாடு பற்றி இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் மாணவர்களால் வகுப்பறையில் முன்வைக்கப்பட்டன.

சாமா:- தொடர்பாடல் தொழினுட்பத்தின் துரித வளர்ச்சியோடு வெவ்வேறு நாடுகளின் தேசிய பண்பாடுகள் நெருங்கி வந்துள்ளன.

அமர்:- பூகோளப் பண்பாடு பாரம்பரிய, வெகுசன மற்றும் தேசிய பண்பாட்டு வகைப்பாடுகளுக்கு ஒத்து உள்ளது.

குமார்:- சகல இனங்களும், பண்பாடுகளும் ஒத்ததன்மையாயிருத்தல் ஒரேவிதமான பூகோளச் சிக்கலாகும்.

தேவி:- பூகோளப் பண்பாடு உலக தேசிய இனப் பண்பாடுகளை அழித்துப் பரவலடைந்த மக்கள் பண்பாடாகும்.

மேற்காணும் கூற்றுகளில் சரியான கூற்றுகளை முன்வைத்தவர்கள்,

(1) சாமா, அமர் மற்றும் தேவி ஆவர்.
(2) சாமா, அமர் மற்றும் குமார் ஆவர்.
(3) சாமா, குமார் மற்றும் தேவி ஆவர்.
(4) அமர், குமார் மற்றும் தேவி ஆவர்.
(5) அமர், சாமா மற்றும் தேவி ஆவர்.

47. ஆய்வு ஒழுக்கநெறிகள் பற்றிய இரண்டு கூற்றுகள் கீழே காணப்படுகின்றன.

A- தரவுகளைப் பெற்றுக்கொள்ளும்போது ஆய்வாளரின் அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தாமை.

B- விரும்பிய நேரத்தில் தரவு வழங்குநர் ஆய்வுச் செயன்முறையினின்று விலக அனுமதி அளித்தல்.

இக் கூற்றுகளில்,

(1) A உண்மையாவதோடு B பொய்யாகும்.
(2) A பொய்யாவதோடு B உண்மையாகும்.
(3) A மற்றும் B ஆகிய இரு கூற்றுகளும் பொய்யானவையாகும்.
(4) A மற்றும் B ஆகியன உண்மையாவதோடு A மூலம் B உறுதிப்படுத்தப்படுகிறது.
(5) A மற்றும் B ஆகியன உண்மையாவதோடு B மூலம் A உறுதிப்படுத்தப்படுகிறது.

48. பாடசாலை ஊடக அலகினால் பிரசுரிக்கப்படும் வார சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் சில கீழ்வருமாறு:

A - விமர்சனரீதியான ஊடக நுகர்வு
ஊடக ஒழுக்கநெறிகள் பற்றிய அறிவு

B - ஊடகக் கொள்கைகள் குழு ஒன்றை நியமித்தல்
ஊடக வரையறை

C - தகவல் பெற்றுக்கொள்ளுதல் பற்றிய அறிவு
சிறந்த பிரஜையாக அபிவிருத்திக்கு துணைபுரிதல்

D - சந்தர்ப்பத்திற்கு உகந்த மொழிப் பாவனை.
படைப்பாக்கரீதியான திறன் விருத்தி

மேற்காணும் விடயங்களில் தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகள் பாடத்தைக் கற்பதன் தேவை பற்றிய **இழிவளவான** முக்கியத்துவத்தைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

(1) A மட்டும்.
(2) B மட்டும்.
(3) A, C ஆகியன மட்டும்.
(4) B, D ஆகியன மட்டும்.
(5) C, D ஆகியன மட்டும்.

www.ikeau.lk

49. தொடர்பாடல் ஆய்வுப் படிமுறைகள் பற்றிய கீழ்க்காணும் A,B,C,D ஆகிய நிகழ்வுச் சோடிகளை உள்வாங்கி விடையளிக்குக.

A - சிந்தனைக் கிளர்வு - பிரச்சினையை இனங்காணல்.
B - நோக்கத்தை இனங்காணல் - முடிவுகளை எடுத்தல்.
C - தகவல் திரட்டல் - அறிக்கை எழுதுதல்.
D - முடிவுகளை எடுத்தல் - அறிக்கை எழுதுதல்.

ஒவ்வொரு சோடியிலும் காணப்படும் விடய உள்ளடக்கங்கள் இடையே மிகவும் நெருங்கிய தொடர்பைக் காட்டுவன,

(1) A மற்றும் B ஆகும்.
(2) A மற்றும் C ஆகும்.
(3) A மற்றும் D ஆகும்.
(4) B மற்றும் C ஆகும்.
(5) C மற்றும் D ஆகும்.

50. வெகுசன ஊடகப் பெறுநர்கள் ஐவரது ஊடகப் பாவனை பற்றிய தகவல் கீழே காணப்படுகிறது.

A - செய்திப் பத்திரிகைகள் மீதான பார்வையை முன்வைக்கும் காலைநேரத் தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு நகரத்திற்குச் சென்று பத்திரிகை வாங்குவார்.
B - கைத்தொலைபேசியில் காலைநேர வானொலி செய்தி அறிக்கையைச் செவிமடுத்துவிட்டு, பெற்றுக்கொண்ட செய்திக் குறுந்தகவல்களை (News Alerts) வாசிப்பார்.
C - அலுவலகத்திற்குச் செல்லும்போது திறன் தொலைபேசி (Smart Phone) மூலம் செய்தி இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களுக்குள் பிரவேசிப்பார்.
D - இரவு உறங்குவதற்கு முன்னர் தொலைக்காட்சிச் செய்தி மற்றும் வானொலிச் செய்திகளை இணையத்தளங்களில் ஆராய்ந்து, செய்திப் பத்திரிகை இணையத்தளங்களை சமூக ஊடகங்கள் மூலம் வாசிப்பார்.
E - YouTube மூலம் திரைப்படம் ஒன்றைப் பார்த்து முகநூல் (facebook) மூலம் செய்தி Post களை வாசிப்பார்.

மேற்காணும் பெறுநர்களில் ஊடகக் குவிகையுடன் மிகவும் நெருக்கமுடைய பெறுநர் குழுவில் இடம்பெறுவோர்,

(1) A, B, C மற்றும் E ஆகியோர்.
(2) A, C, D மற்றும் E ஆகியோர்.
(3) B, C, D மற்றும் E ஆகியோர்.
(4) B, D மற்றும் E ஆகியோர்.
(5) C, D மற்றும் E ஆகியோர்.

* *

www.ikeduk

வினாப்பத்திரம் II

பகுதி A

• **2008 (பழைய) மற்றும் 2018 (புதிய) பாடத்திட்டங்கள் இரண்டுக்கும் பொதுவான பாடப் பகுதிகளிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளிலிருந்து இரண்டு (02) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

01. (i) வாய்மொழித் தொடர்பாடலுக்குரிய பணிகள் **நான்கைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)
(ii) ஆளிடைத் தொடர்பாடலின் பயன்கள் **நான்கைப்** பெயரிட்டு, அவற்றுள் **ஒன்றைப்** பற்றிச் சுருக்கமாக விவரிக்குக. (08 புள்ளிகள்)
(iii) ஒஸ்குட் - ஷ்ராம் மாதிரியின் விசேட இயல்புகள் **மூன்றை** விளக்குக. (12 புள்ளிகள்)
(iv) வெகுசன ஊடகங்களின் பணிகள் **நான்கை** அடிப்படையாகக் கொண்டு அவை தற்கால வெகுசன ஊடகங்களில் பயன்படுத்தப்படும் விதத்தை உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

02. அன்றாட வாழ்க்கை மற்றும் ஊடகத்திற்கிடையிலான தொடர்பை அர்த்தமுள்ளதாக மாற்ற ஊடக விளங்கறிவு மற்றும் ஊடகத் திறனாய்வு என்பன முக்கியமானவையாகும்.
(i) ஐரோப்பிய ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணத்திற்கிணங்க ஊடக விளங்கறிவுடன் தொடர்புடைய பிரதான விடயங்கள் **இரண்டைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)
(ii) ஊடகத் திறனாய்வின் அவசியத்தை **இரண்டு** விடயங்களுக்கூடாகச் சுருக்கமாக விவரிக்குக. (08 புள்ளிகள்)
(iii) தொலைக்காட்சிப் பார்வையாளர் விமர்சனரீதியான பெறுநராக இருக்கவேண்டியதன் அவசியத்தை **மூன்று** விடயங்களுக்கூடாக விளக்குக. (12 புள்ளிகள்)
(iv) "ஊடக விளங்கறிவில் செழிப்பான நாடு" எனும் தலைப்பில் கீழ்க்காணும் கருப்பொருட்கள் உள்ளடங்கும் வகையில் பத்திரிகை ஒன்றிற்கு **300** சொற்களுக்குக் குறையாத ஆக்கம் **ஒன்று** எழுதுக.
- தொடர்பாடுநர்
- தகவல்
- பெறுநர்
- தாக்கம் (16 புள்ளிகள்)

03. "படைப்பாற்றல் மற்றும் தொடர்பாடலுக்கு இடையே காணப்படுவது வேறுபிரித்திட முடியாத உறவு ஆகும்."
(i) வானொலி ஊடக மொழிப் பாவனையின்போது கருத்திற்கொள்ளவேண்டிய விடயங்கள் **நான்கைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)
(ii) உங்கள் பாடசாலையின் பிரதிமையை மேம்படுத்துவதற்கான படைப்பாக்கபூர்வமான பொதுசனத் தொடர்பு வழிமுறைகள் **இரண்டைச்** சுருக்கமாக விவரிக்குக. (08 புள்ளிகள்)
(iii) படைப்பாக்கரீதியான அபிவிருத்திச் செயற்றிட்டம் ஒன்றிற்காக பயன்படுத்தக்கூடிய பாரம்பரிய வழிமுறைகள் **மூன்றை** உதாரணங்களுடன் விளக்குக. (12 புள்ளிகள்)
(iv) பிரசித்த பண்பாட்டின் பண்புகள் **நான்கை** உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக. (16 புள்ளிகள்)

பகுதி B

• **இப்பகுதியில் 4,5,6,7 ஆகிய வினாக்கள் 2008 (பழைய) பாடத்திட்டத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளதோடு 8,9,10,11 ஆகிய வினாக்கள் 2018 (புதிய) பாடத்திட்டத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியிலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களை தெரிவு செய்து விடையளிக்குக.**

04. வெகுசன ஊடகத் தொழிற்துறையை அரசியல் மற்றும் வர்த்தகக் குழுக்கள் கையாளல் செய்கின்றன.
(i) வெகுசன ஊடக விரிவாக்கத்துடன் உருவாக்கப்பட்ட உலகினைக் குறிப்பிட்டு சொல்லும் எண்ணக்கருவினைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)
(ii) விளம்பரப்படுத்தல் மூலம் பண்பாட்டில் ஏற்படுத்தப்படும் தாக்கங்களை **இரண்டு** விடயங்களுக்கூடாக விவரிக்குக. (08 புள்ளிகள்)
(iii) ஒரு நபரின் நாளாந்த நிகழ்ச்சி நிரலை வெகுசன ஊடகங்கள் கட்டியெழுப்புகின்ற விதத்தை **மூன்று** வெவ்வேறு விடயங்களைப் பயன்படுத்தி விளக்குக. (12 புள்ளிகள்)
(iv) திறனாய்வு (அல்லது விமர்சனம்) மீதான வரலாற்று மற்றும் அரசியல் அணுகுமுறைகள் (அல்லது பிரவேசங்கள்) **இரண்டைப்** பொருத்தமான உதாரணங்களைப் பயன்படுத்தி ஆராய்க. (16 புள்ளிகள்)

05. தேசிய நெருக்கடிச் சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தினால் ஊடகத் தணிக்கை நடைமுறைப்படுத்தப்படும்.

(i) சமூக ஊடகங்களைத் தணிக்கை செய்வதால் சமூகத்திற்கு ஏற்படும் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் **இரண்டு** வீதம் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) பொதுசனத் தொடர்பு நடவடிக்கைகளுக்காக முகநூலின் (**facebook**) மூலம் பெற்றுக்கொள்ளத்தக்க நன்மைகள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றினை** விவரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) "பழமொழிகள் சுதேச அறிவையும் ஞானத்தையும் வெளிப்படுத்துகின்றன." பழமொழிகளில் காணப்படும் தொடர்பாடல் முக்கியத்துவத்தை **மூன்று** விடயங்களினூடாக விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) அபிவிருத்திச் செயற்றிட்டம் ஒன்றின் மதிப்பீட்டுச் செயலொழுங்கின் மூலம் எதிர்பார்க்கப்படுவது யாது என்பதை **நான்கு** விடயங்களுக்கூடாக ஆராய்க. (16 புள்ளிகள்)

06. (i) ஊடகப் பண்பாட்டின் பண்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) வெகுசனத் தொடர்பாடல் செயன்முறையில் செய்தியில் ஏற்படக்கூடிய பாதிப்பினை, அதில் இடம்பெறும் முக்கிய தடைகளின் **இரண்டு** வகைகளை அடிப்படையாகக் கொண்டு உதாரணங்களுடன் விவரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) செய்திப் பத்திரிகை ஒன்றிற்கு ஆசிரியர் தலையங்கம் ஏன் முக்கியமானது என்பதற்கு **நான்கு** காரணங்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினை** விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) அபிவிருத்தித் தொடர்பாடல் குறித்து வேறுபட்ட கருத்துரைத்த **நான்கு** மேற்கத்தேய நிபுணர்களைப் பெயரிட்டு, அவர்களில் இருவர் அபிவிருத்தித் தொடர்பில் முன்வைத்த **இரண்டு** விடயங்கள் வீதம் தனித்தனியே விளக்குக. (16 புள்ளிகள்)

07. (i) எண்மான (டிஜிட்டல்) அச்சிடலின் **இரண்டு** முக்கிய பண்புகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) பூகோளமய ஊடகத்தில் பண்பாட்டுச் சுற்றோட்டத்தின் சமநிலையற்ற தன்மையைக் காட்டும் விடயங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விவரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) பொதுமக்கள் தொடர்பு நடவடிக்கைகளில் புகைப்படவியலைப் பயன்படுத்தக்கூடிய வழிகள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினை** விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) தற்போதைய வெகுசன ஊடகச் செயன்முறையில் தணிக்கை பிரயோகப்படுத்தப்படும் **நான்கு** வழிகளை உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

08. அமெரிக்காவிலிருந்து பேராசிரியர் விமல் திசாநாயக்க அவர்கள் "தொடர்பாடல் ஊடகக் கற்கை மற்றும் அதன் போக்குகள்" எனும் தலைப்பில் நடாத்திய விரிவுரையில் இணையத்தளம் ஊடாக நேரடியாகப் பங்குபற்றும் சந்தர்ப்பம் இந் நாட்டு மாணவர்களுக்குக் கிட்டியது.

(i) மேற்குறித்த சந்தர்ப்பம் உள்ளடங்கும் தொடர்பாடல் வகையைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) அத் தொடர்பாடல் வகையின் விசேட இயல்புகள் **நான்கைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றை** விவரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) கல்விச் செயற்பாட்டிற்காகக் கட்புலத் தொடர்பாடலைப் பயன்படுத்தக் கூடிய முறைகள் **மூன்றை** விளக்குக. (12 புள்ளிகள்)

(iv) பூகோளமயமாதல் காரணமாக ஊடகத் துறையில் ஏற்பட்டுள்ள புதிய போக்குகள் **நான்கை** உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக. (16 புள்ளிகள்)

www.kdu.lk

09. சமூக ஊடகங்கள் மூலமாக ஒன்றிணைந்த இளைஞர் யுவதிகள் நாட்டை அலங்கரிக்கும் நோக்குடன் நகரச் சுவர்களில் ஓவியங்கள் வரைந்து அழகுபடுத்தினர்.

(i) சமூக ஊடகங்களின் உள்ளீடுகள் (Apps) **இரண்டையும்** பணிகள் **இரண்டையும்** பெயரிடுக.
(04 புள்ளிகள்)

(ii) நகரை அலங்கரித்தல் தொடர்பில் பல்வேறு நாட்டுத் தகவல்களை புதிய ஊடகங்கள் வாயிலாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய முறைகள் **இரண்டினை** உதாரணங்களுடன் விவரிக்குக.
(08 புள்ளிகள்)

(iii) நாட்டார் வாழ்வியலின் ரிதம் நாட்டார் கவிதைகளில் உள்ளார்ந்து காணப்படுகின்றது. நாட்டார் கவிதையில் காணப்படுகின்ற தொடர்பாடல் பண்புகள் **இரண்டை** விவரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) சமூகம் மற்றும் பண்பாட்டில் வெகுசன ஊடகங்களைவிட சமூக ஊடகங்கள் அதிக தாக்கத்தைச் செலுத்துகின்றன. இதற்குச் சார்பாக அல்லது எதிராக **நான்கு** காரணிகளுக்கு ஊடாக விளக்குக.
(16 புள்ளிகள்)

10. ஊடகத் துறையில் காலத்திற்குக் காலம் ஏற்படுகின்ற புதிய போக்குகள் காரணமாக அதற்குரிய வரையறைகளும் கொள்கைகளும் விரிவாக்கப்படுவதை தடுக்க இயலாது.

(i) ஊடகத் தணிக்கைக்காகப் பயன்படுத்தப்படும் அடிப்படைப் பிரவேசங்கள் **நான்கைப்** பெயரிடுக.
(04 புள்ளிகள்)

(ii) பயன்பாடு மற்றும் பாவனையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஊடகப் போக்குகள் **இரண்டைச்** சுருக்கமாக விவரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) ஊடகத் தணிக்கையுடன் தொடர்புடைய இலங்கை நிறுவனங்கள் **நான்கைப்** பெயரிட்டு அவற்றுள் **இரண்டை** விவரிக்குக. (12 புள்ளிகள்)

(iv) வெகுசன ஊடகங்களில் காலத்திற்குக் காலம் நிகழும் வன்முறைகள் பற்றிய பெறுநரது மனப்பாங்கை வினவும் ஆய்வொன்றில் பயன்படுத்தக்கூடிய தரவுகளைத் திரட்டும் முறைகள் **இரண்டை** உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

11. கிராமம் ஒன்றில் ஆரம்பிக்கப்படவிருந்த இரசாயனக் கைத்தொழிற்சாலை தொடர்பில் மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

(i) இத்தகையதொரு முரண்பாட்டைத் தீர்த்துக்கொள்வதற்காக மக்களுடன் நடாத்தப்படும் கலந்துரையாடலை வெற்றியானதாக மாற்றுவதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் **நான்கைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) இக் கைத்தொழிற்சாலை ஆரம்பிக்கும் விடயம் தொடர்பில் அப்பிரதேச அரச நிறுவனம் ஒன்றின் சலுகைகள் கைத்தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு கிடைத்துள்ளதாக மக்கள் மத்தியில் கருத்தொன்று பரவியது. இக் கருத்து அவ் அரச நிறுவனம் தொடர்பில் ஏற்படுத்தக் கூடிய எதிர்மறையான தாக்கங்களுக்கு ஏதுவான விடயங்கள் **இரண்டை** விவரிக்குக. (08 புள்ளிகள்)

(iii) சிறந்த பௌதீகச் சூழலை உருவாக்குதல் அபிவிருத்திக்கான தொடர்பாடலின் பிரதான தேவையாகும். இதனை **மூன்று** விடயங்களுக்கூடாக உதாரணங்களுடன் விவரிக்குக.
(12 புள்ளிகள்)

(iv) கைத்தொழிற்சாலை மீது எழுந்துள்ள எதிர்ப்பை முகாமைத்துவம் செய்வதற்கு கைத்தொழிற்சாலையின் பொதுசனத் தொடர்பு அதிகாரி மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் **நான்கை** விளக்குக.
(16 புள்ளிகள்)

* * *